பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி

மலர்: 15] சென்னை: மார்கழி 28 (12—1—68) வெள்ளி ★ வெளியூர்: மார்கழி 29 (13—1—68) சனி [இதழ்: 176

பர்மா அகதிகளுக்கு மறுவாழ்வு

வேலூர், சன. 11—

வடாற்காடு மாவட்டத்திலுள்ள பர்மா அகதிகளுக்குக் குடியிருப்பு வசதித் திட்டத்தின்கிழ் 1967—68-ம் ஆண்டுக்கு ரூ. 1.5 இலட்சத்திற்கும் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கிராமப் பகுதிகளில் வீடு கட்ட ரூ. 2,250 வீதமும், நகரப் பகுதிகளில் வீடு கட்ட ரூ. 4,500 வீதமும் தரப்படும்.

நேரு உறுதிமொழி நிறைவேறிவிட்டதா?

புதிய சட்டத்தின் மூலம் இந்தி பேசாதவர்கட்கு இடையூறு ஏற்படாதாம்

டெல்லி அதிகாரியின் 'அற்புத வியாக்கியானம்'!

புதுடில்லி, சன. 11—

நேற்றுக் குடியரசுத் தலைவரின் கைச்சாற்றைப் பெற்றுவிட்ட ஆட்சிமொழிச் சட்டத்தால், 'எந்தவிதச் சிக்கலோ இடர்பாடுகளோ ஏற்படாது' என்று தொடர்புடைய அதிகாரி ஒருவர் இங்கு விளக்கமளித்தார்.

இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், மத்திய அரசில் பணியாற்றும் எந்த ஊழியரும் இந்தியில் அலுவல்களைக் கவனிக்க வேண்டும் என்றோ, இந்தியில் அலுவல்களைக் கவனிக்கக் கூடாது என்றோ கட்டாயப்படுத்தப்படமாட்டார்களாம்.

இந்தி தெரியாத காரணத்தால் எந்த ஊழியருக்கும் இடையூறு ஏற்படாதாம்! அதேநேரத்தில், இந்தி மட்டுமே தெரிந்த ஊழியர்களுக்கும் எவ்வித இடையூறும் ஏற்படாதாம்! அவர்களுடைய வசதிக்காக அவர்கள் அறிந்திருக்கும் மொழியில் மொழிபெயர்ப்புக் கொடுக்கப்படுமாம்! குறிப்பெழுதுபவரே, வேறு மொழியில் மொழியில் மொழிபெயர்க்க வேண்டுமென்ற பொறுப்புக் கிடையாதாம்!

"இரு மொழிகளிலும் அரசுத் துறைகள் அலுவல்களைக் கவனிப்பதால், பொதுமக்களுக்கும் எவ்வித இடர்ப்பாடும் இருக்காது" என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்.

தீர்மானங்கள் — பொது உத்தரவுகள் — அறிவிப்புக்கள் — பத்திரிகைச் செய்திகள்—நிர்வாக அறிக்கைகள் ஆகியவை இரு மொழிகளிலும் வெளியிடப்படுமாம்.

மத்திய அரசுத் தொடர்பான ஒப்பந்தங்கள்—லைசென்சு—பெர்மிட்டுகள்—ஒப்பந்த விளம்பரங்கள் அனைத்தும் இரு மொழிகளிலும் இருக்குமாம்! நாடாளுமன்றத்தில் வைக்கப்படும் எல்லா வகை வெளியீடுகளும் அறிக்கைகளும் இரு மொழிகளிலும் இருக்குமாம்!

மத்திய அரசுடனும், பிற மாநில அரசுகளுடனும் ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழியில் கடிதத் தொடர்புகொள்ள வேண்டுமென்று இந்தச் சட்டம் வற்புறுத்தாதாம்!

உயர் நீதிமன்றம்—தலைமை நீதிமன்றம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், ஆங்கிலமே தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்றும். எந்த மாநிலத்தின் கவர்னராவது விரும்பினால் குடியரசுத் தலைவரின் முன்னனுமதி பெற்று ஆங்கிலத்துடன் வட்டார மொழியையும் உயர் நீதிமன்றத்தில் பயன்படுத்த ஆணை பிறப்பிக்கலாமாம்!

இந்தியைத் தங்கள் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளாத மாநிலங்கள் விரும்பும் காலம்வரை ஆங்கிலமே நீடிக்குமாம்!

இந்தி பேசாத மாநிலங்களுடனான மத்திய அரசின் எல்லாக் கடிதத் தொடர்புகளும், ஆங்கிலத்திலேயே இருக்குமாம்! இந்தியை ஆட்சிமொழியாகக் கொண்ட மாநிலங்கள் இந்தி பேசாத மாநிலங்களுக்கு இந்தியிலேயே கடிதம் எழுதலாமாம்—ஆனால், ஆங்கில மொழிபெயர்ப்பும் உடன் அனுப்பவேண்டுமாம்!

இவ்வாறெல்லாம் விளக்கம் அளித்துள்ள அந்த அதிகாரி, 'இந்தச் சட்டத்தின்மூலம், நேருவும் லால்பகதூர் சாஸ்திரியும் இந்தி பேசாத பகுதி மக்களுக்கு வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்பட்டுவிட்டது' எனவும் கூறியிருக்கிறார்.

இலக்கிய வர்ணனைக்கு உரிய நிகழ்ச்சி

இப்படி ஒன்று இதுவரை நடந்ததில்லை!

சென்னை, சன. 11—

"அகவேலை—புறவேலை என இரண்டு உண்டு; அந்த அகவேலை, உலகத் தமிழ் கருத்தாராய்ச்சி அரங்கில் நடைபெற்றது; புறவேலை, பூம்புகார் நகரில் நடைபெற்றது; அங்கு இலட்சக்கணக்கில் தமிழர்கள் கூடியிருந்து உரை கேட்டது, உலகத்திலேயே உன்னத நிகழ்ச்சியாகும்; இலக்கிய வர்ணனைக்கு உரியதாகும்; 'இதுவரையில் இப்படியொரு நிகழ்ச்சி நடந்ததில்லை' எனக் கூறத் தகுந்ததாகும்.

"நாங்கள் தமிழகத்தில் காலடி எடுத்து வைத்ததிலிருந்து தமிழரின் விருந்தோம்பல் கண்டு மகிழ்ந்தோம்; முதலமைச்சரும், அமைச்சரவையினரும் தந்த ஆதரவு போற்றுதற்குரியது.

"மலேசிய நாட்டின் சார்பில் அமைச்சர் சம்பந்தம் இங்கு வரவிருந்தார்; ஆனால், அவசியமான வேலைகள் நிமித்தம் அவர் தங்க நேரிட்டுவிட்டது.

அடுத்த மாநாடு பாரிசிலும், அதற்கடுத்த மாநாடு இலங்கையிலும் நடக்கிறது; அதற்கடுத்து மலேசியாவில் நடக்கவிருக்கிறது. அந்த மாநாட்டிற்கு வருக என அனைவரையும் அழைக்கிறேன்."

—மலேசியப் பிரதிநிதி
ஆதி நாகப்பன்
(அண்ணா அளித்த விருந்தில்)

குண்டர்களுக்கு டில்லி அமைச்சர்களின் துணை

சமூகவிரோதச் செயல்களைத் தடுக்கத் தவறிவிட்டது மத்திய அரசு

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கண்டனம்

புதுடில்லி, சன. 12—

"டில்லி மாநகரில் குற்றங்களைத் தடுக்கத்தக்க நடவடிக்கை எடுக்க மத்திய அரசு தவறிவிட்டது"

என்று பல்வேறு அரசியல் கட்சிகளையும் சார்ந்த பிரதிநிதிகள் வன்மையாகக் கண்டித்தனர்.

மத்திய அரசின் நேரடியான ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில், 'சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டும்' என்ற நேரடிப் பொறுப்பினைக்கொண்ட மத்திய அரசு, மக்களுக்கு பாதுகாப்பு வழங்கத் தவறிவிட்டது குறித்து கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

"நிர்வாகத் திறமையற்ற—கையூட்டுக்குப் பெயர் பெற்ற டெல்லி காவல்துறையினரின் கூட்டுடன் போட்டி சர்க்கார் நடத்துகின்றனரோ" என்று எண்ணத்தக்க நிலையில் உள்ள குண்டர்களின் தயவில்தான், இன்று மக்கள் இங்கு வாழவேண்டியநிலை ஏற்பட்டிருக்கிறது"

என்று நகர மக்கள் குழுவின் ஆதரவில் நடைபெற்ற கருத்தரங்கில கருத்தறிவிக்கப்பட்டது.

நகர மக்கள் குழுவின் ஆதரவில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய ஜனசங்க—வலதுசாரி—கம்யூனிஸ்டுக் கட்சி—உள்ளூர் காங்கிரசுக் கட்சி ஆகிய அமைப்புக்களைச் சார்ந்த தலைவர்கள் பேசுகையிலேயே மேற்கண்ட சம்பவங்களைச் சுட்டிக்காட்டி மத்திய அரசைக் கண்டித்தனர்.

"குண்டர்களையும் சமூக விரோதிகளையும் பிடித்து, தக்க நடவடிக்கை எடுப்பதற்குக் காவல் துறையினரால்கூட இயலாததற்குக் காரணம், குண்டர்களுக்கும் சமூக விரோதிகளுக்கும் டில்லி அமைச்சர்களின் ஆதரவு இருப்பதுதான்"

என்று இவ்விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசிய ஜனசங்கத் தலைவர் குறிப்பிட்டார்.

"இரவு இராஜாக்களுக்கும் இராணிகளுக்கும் நிர்வாக இயந்திரத்தின் ஆதரவு இருக்கும்வரையில், குற்றங்களைத் தடுப்பது என்பது மெத்த சிரமமானதாகும்"

என்று மேலும் பேசுகையில் சுட்டிக் காட்டினார்.

அண்ணாவை நாடி வந்தோம்

சென்னை, சன 11—

"இலங்கையில் நாங்கள் இருந்தாலும் தமிழ்த் தாயின் பிள்ளைகள் நாங்கள்! தமிழ்த் தாய்க்கு விழா எடுக்கும்போது பிள்ளைகள் ஆர்வத்துடன் வருவது இயற்கைதானே!

"ஊர்வலத்தில், பழங்காலத் தமிழகத்தை— திருவள்ளுவர் போன்ற புலவர்களைக் கண்டு மகிழ்ந்தோம்! அந்நாளிலிருந்து பட்டினத்தை நாங்கள் கண்டதில்லை; இந்நாளில் ஒரு காவிரிப்பூம்பட்டினத்தைக் கண்டு மகிழ்ந்தோம்!

"இலங்கையின் பெரிய மதமான புத்த மதத்திற்கு, புத்தரைத் தந்தது இந்நாடு! எங்களுக்கு மொழி தந்தது இந்நாடு! அதனால், இந்நாட்டுடன் பிரியமாக இருக்கிறோம்!

"தம்பியர்கள், அண்ணாவிடம் ஆர்வத்துடன் வருவது இயற்கைதான்; அதுபோல், உலகத் தமிழ் மாநாடு அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் நடக்கும்போது நாங்கள் இலங்கையிலிருந்து வருவதில் பெருமகிழ்ச்சியடைந்தோம்!

"'தமிழ் மொழி அழிந்து போகுமோ' என்ற அச்சம் நிலவுகிறது; தமிழ் மொழி தெய்வ மொழி—அது அழியாது!

"தமிழர்கள், தங்கள் தாய்க்கு அடுத்தபடியாகத் தாய் மொழியை உயிரினும் மேலாகக் கருதுகிறார்கள்!"

—இலங்கைப் பிரதிநிதி
நீதிபதி தம்பையா
(அண்ணா அளித்த விருந்தில்)

மொழி சட்டத்தால் பிரிவினை ஆபத்து

ஆந்திர சட்டமன்ற உறுப்பினர்கள் எச்சரிக்கை

ஐதராபாத், சன. 11—

'ஆட்சிமொழித் திருத்த மசோதாவும், மொழிக் கொள்கைத் தீர்மானமும் இந்தி பேசாத பகுதி மக்களிடை அச்சத்தை அதிகரிக்கவே உதவியுள்ளன.

"இந்தி பேசாத பகுதி மக்களின் அச்சத்தையும், ஐயப்பாட்டையும் போக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட மசோதா, இந்திவெறியர்களைத் திருப்தி செய்வதையே குறிக்கோளாகக்கொண்டு முடிவு செய்யப்பட்டிருக்கிறது; இது, மிக மோசமான விளைவுகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும்; 'இந்திப் பகுதி' என்றும், 'இந்தி பேசாத பகுதி' என்றும் இரு கூறுகளாக நாடு பிரியும் நிலை உருவாகும்; 'பிரிவினைச் சக்தி'கள் தலைதூக்க வழி ஏற்படும்"

என்று, ஆந்திர சட்டமன்ற உறுப்பினர்கள் 40 பேர் கையெழுத்திட்டு—'மொழிக் கொள்கையைப் பரிசீலனை செய்யவேண்டும்' எனத் தலைமையமைச்சரைக் கோரி—விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆட்சிக் கவிழ்ப்பு வீரரின் பெருமிதம்

வாழ்நாளிலேயே பெற்ற பெரும்பேறும்!

கல்கத்தா, சன. 11—

"வங்கத்தில் கூட்டணி அமைச்சரவையின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்ததன் மூலம், என் வாழ்நாளிலேயே மிகவும் தலைசிறந்த தொண்டு செய்தவனானதாக நினைக்கிறேன்"

என்று வங்க முதலமைச்சர் டாக்டர் பி, சி. கோஷ், பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

"தங்களுக்கு எண்ணிக்கைப் பலம் இருப்பதாகக் கூட்டணியினர் கருதினால், சட்டமன்றத்தில் அதை மெய்ப்பிக்கட்டும்; அதற்கு நடுத்தெருவோ, வெட்டவெளியோ இடமல்ல" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

செழுமைமிக்க பாரம்பரியத்துக்குச் சொந்தக்காரர்கள் நாம்!

உண்மையைக் கண்டறிய நீண்ட ஆராய்ச்சி தேவை

ஆராய்ச்சிக் கருத்தரங்கில் முதலமைச்சர் அண்ணா ஆய்வுரை

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் கூடிய உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கின் இறுதிநாளில் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில், எத்தகைய தொன்மையும் செழுமையுமிக்க மொழிக்கும் பாரம்பரியத்திற்கும் நாம் சொந்தக்காரர்கள் என்பதையும், நமது ஆராய்ச்சியின் நோக்கம் எத்தன்மையதாய் அமைந்திடல் வேண்டும் என்பதையும் எடுத்து விளக்கினார்கள்; அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு :—

ஆராச்ய்சியுடன்—குறிப்பாகத் தமிழ் மொழி, தமிழ் இலக்கிய ஆராய்ச்சியுடன் தொடர்பற்றவனாகியவன் நான்; எனவே, கருத்தரங்கில் குழுமியுள்ள உங்களால் ஏற்கப்படுவதற்கோ, அல்லது தள்ளப்படுவதற்கோ நான் புதிய யோசனை எதையும் எடுத்துரைக்க இயலாமையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கருத்தரங்கு அல்லது ஆராய்ச்சி அரங்குகளில், முடிந்த முடிவுகளை எடுத்துக்கூறி, அவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று எதிர்பார்த்தல் கூடாது; அத்தகைய எண்ணம் ஏற்படுவதையே கருத்தரங்கு புறக்கணிக்கிறது.

சிந்தனைகளைச் சேகரித்துக் கோவைப்படுத்தி விடுவதே கருத்தரங்குகளின் பணியாகும். தங்களையொத்த அறிஞர்களின் முன்னிலையில் தாங்கள் அறிந்தவற்றை எடுத்துக்கூறி, எந்த அளவு தங்கள் கருத்து அவர்கள் கருத்தோடு ஒத்துப்போகிறது—எந்த அளவு வேறுபடுகிறது என்று அறிந்து—மேலும் அது குறித்த விவாதத்துக்கு வழிவகுத்து—இத்தகைய கருத்தரங்குகளிடமிருந்து நற்பலன்களை எதிர்பார்த்திடும் மக்கள் முன், கனிந்து உருவாகிய கருத்துக்களை வைத்திட வேண்டும்.

அத்தகைய உன்னதமான நோக்குடன்தான் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டுவந்துள்ளது என்பதில் எனக்கு ஐயமில்லை. கருத்தரங்கின் முடிவுகள் இலட்சக்கணக்கான மக்களுக்கு உற்சாக மூட்டுவதாக இருக்குமென்றும் நம்புகிறேன்.

தமிழ் ஆராய்ச்சியில் மட்டும் அல்லாமல், 'தமிழ் மொழியானது அதன் ஆற்றலையும், அதன் தூய்மையான பண்பையும் பழுதில்லாது பாதுகாக்க வேண்டும்' என்பதிலும் மக்கள் அக்கறை கொண்டுள்ளனர்.

கருத்தரங்கின்முன் வைக்கப்பட்ட அறிக்கைகளும், எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்களும், மக்களைப் புதுவழியில் சிந்திக்கத் தூண்டிடும் தன்மையானவை; புதிய கோணங்களிலிருந்து உண்மையை அறிந்திடத் தூண்டும் அளவுக்கு மிக உயர்ந்த தரத்தை உடையனவாக அவை இருந்தன என்று கருதுகிறேன். இந்த மட்டில், கருத்தரங்கு மாபெரும் வெற்றியைத் தேடியுள்ளதென்றே நான் கருதுகிறேன்.

வளம்—செறிவு—நெகிழ்வு—பல்துறை இயக்கம்—என, இவையனைத்தையும் தனக்கெனப் பெற்றுள்ளது தமிழ் மொழி என்பது என்போன்ற சாதாரண மனிதர்களின் கருத்தாகும். இந்த உயர் மொழியை உருவாக்கிப் பாதுகாத்துவருவது நாமல்ல; வளமும் செறிவும் நெகிழ்வுமுடைய இம்மொழியைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தோர், செப்பனிடவோ சீர்திருத்தவோ அவசியமில்லாதபடி விட்டுச்சென்றிருக்கிறார்கள்.

செழுமைமிக்க பாரம்பரியத்தின் சொந்தக்காரர்கள் நாம். மிகச் சிறந்த இலக்கியங்களைக்கொண்ட வலிமைமிக்க—உயிர்த்துடிப்புள்ள ஒரு மொழியின் சொந்தக்காரர்கள் நாம்!

ஆராய்ச்சி அறிஞர்கள் இம்மொழிக்குப் புதிய வலிவு தேடவோ, புதிய இலக்கணம் வகுக்கவோ, செறிவைக் கூட்டவோ முயலவில்லை. அவர்கள் முயற்சியின் நோக்கமெல்லாம், தமிழ் மொழியின் தொன்மையை ஆராய்ந்து அதன் வயதைக் கணிப்பதிலும், மக்களது எண்ணங்களை எடுத்துரைக்கக்கூடியதாக—இங்கு மட்டுமல்லாமல் உலக மக்களது எண்ணங்களையெல்லாம் எடுத்துரைக்கக்கூடியதாக — நாடுகளுக்கிடையேயான அறிவார்ந்த கருத்துப் பரிமாற்றத்துக்கும் பயன்படக்கூடியதாக—தமிழ் மலர வேண்டுமென்பதுதான்!

இப்பரந்த நோக்கங்களை மனத்தில் கொண்டால், பிற மொழிகளிடத்துப் பற்றுக்கொண்டோரால்—தமிழர்களாய்ப் பிறந்தும் தமிழ் மொழியினிடத்து விரோதம் கொண்டோரால் தங்கள் தமிழ் குன்றிடவோ, குறைவுறவோ கூடாது என்றெண்ணிடும் தமிழ் மக்களுக்கு நாம் மிகப் பெரிய நன்மை செய்தவர்கள் ஆவோம். இக்கருத்தரங்கின் வழிகாட்டுதல்கள், இனி வருங்காலத்தில் நடைபெறவிருக்கும் ஆராய்ச்சிகளுக்கெல்லாம் பயன்பட்டு நல்ல பல பலன்களை அளித்திடுமெனவும் நம்புகிறேன்.

'தமிழ் மொழி, தொன்மைமிக்கது' என்பதாலேயே ஒரு சங்கடம் ஏற்படுகிறது. அதற்குப் புறம்பான சிலவற்றைப் புகுத்திக் கூறிடவும், ஐயப்பாடுகள் சிலவற்றை எழுப்பிடவும், உகந்ததாகச் சிலவற்றைக் கூறிடவும், விரோதமானதைச் சொல்லிடவும், தேவையானதை எடுத்துக் கூறவும், மொழியின் தொன்மை காரணமாக இடமேற்பட்டு விடுகிறது. உலகெங்கும் உள்ள பழைய கோட்டைக் கொத்தளங்கள் குறித்தும், பழைய கருத்துக்கள்—முறைகள் ஆகியவை குறித்தும் இவ்வாறு நிகழுகிறது.

'எது தொன்மையானது—எது இடையில் புகுத்தப்பட்டது' என்பதை ஆராய்ந்து கூறுவதிலேயே ஆராய்ச்சியாளர்களின் பணி அடங்கியுள்ளது. இவ்வாறு சொல்வதன் மூலம், 'இடையில் புகுத்தப்பட்ட அனைத்தும் தீமை பயக்கக்கூடியவை' [illegible] ஆகாது. அதேபோது, 'புகுத்தப்பட்டவற்றால் நன்மை உண்டு' என்று நான் ஏற்பதாகவும் பொருள் கொள்ளக்கூடாது. நல்லவை பல இருக்கலாம்; தீங்கு பயப்பதாகவும் சில இருக்கக்கூடும். ஆராய்ச்சியாளர்களின் பணியானது, நீதிமன்றங்களில் சொல்லுவார்களே—'உண்மை அல்லாமல் வேறில்லை' என்று—அதுபோல், உண்மையைக் கண்டறியக்கூடியதாக இருக்கவேண்டும்.

உண்மை, எளிதில் கைக்குச் சிக்காது—நழுவி ஓடிவிடும் தன்மையுள்ளது! இதற்கு ஆராய்ச்சியாளர்கள் மிகப் பலர் தேவை! ஆண்டுகள் மிகப் பல தேவை!

எனவே இங்கு குழுமி தாங்கள் இதுகாறும் நடத்திய ஆராய்ச்சி குறித்துக் கலந்துரையாடும் பன்னாட்டு அறிஞர் பெருமக்களுக்கு என் நன்றி.

"பல ஆராய்ச்சிகளால் செறிவூட்டப்பட்ட நவீன மொழிகள் எனப்படுகின்றவற்றோடு தொன்மைத் தமிழ் மொழி எந்த அளவுக்கும் மட்டமானதல்ல" என்பதே இந்த அறிஞர் பெருமக்கள் கண்ட முடிவாகவுள்ளது.

தமிழ் ஒரு பண்டை மொழி என்பது மட்டுமல்லாமல் நவீன மொழிகள் அனைத்துக்கும் இணையாகவும் உள்ளது என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு; 'புத்தம் புதிய கருத்துக்களைத் தெரிவிக்கவும் தமிழால் முடியும்' என்பதை அவர்கள் கண்டுள்ளனர். இந்த உண்மையை எவ்வாறு நிலைநாட்டுவது? பல்வேறு கருத்துக்களையும் ஆராய்ந்து பார்ப்பதன் மூலமும், ஏற்பதன் மூலமும்தான் இதனைச் சாதிக்க முடியும்.

மனிதனின் நுண்புலமிக்க கருத்துக்களை மட்டுமல்லாமல், விஞ்ஞானக் கருத்துக்களையும் இம்மொழியின் மூலம் எடுத்தியம்ப இயலும். இதை அறியாதார் வெளிநாடுகளிலும் இங்கேயும் உள்ளனர்; அவர்களுக்கு இந்த உண்மையை நாம் எப்படி உணர்த்தப் போகிறோம்? தொடர்ந்த இடைவிடாத முயற்சியின் மூலமும், எப்பக்கமிருந்து நற்கருத்துக்கள் வந்தாலும் அவற்றை ஏற்றுச் செயல்படுவதன் மூலமும்தான் இதைச் செய்யமுடியும். இதையே இக்கருத்தரங்கம் தன் நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

இக்கருத்தரங்கு, மக்களிடமிருந்து வெகுதூரம் விலகி நிற்பதாக மக்களிடம் கருத்து நிலவுகிறது; இதுகுறித்துத் தங்கள் மனக்குறையைத் தெரிவிக்கத் தங்களுக்கு உரிமை உண்டென்றும் மக்கள் கருதுகிறார்கள்; அதை நான் மறைக்க விரும்பவில்லை; ஏனெனில், அது தேவையில்லை. மக்களுக்கு நாம் விளக்கமளித்திட வேண்டும். கருத்தரங்கத்துக்கும்—மாநாட்டுக் கூட்டத்துக்கும்—கருத்தரங்க விவாதத்திற்கும் வேறுபாடு உண்டென்பதை அவர்களுக்கு விளக்கிட வேண்டும். ஆனால் மக்கள் கொண்டுள்ள பற்று மிக ஆழமானது—இடைவிடாதது—நெருக்கமானது!

தங்கள் தமிழைக் கற்றுணர்ந்து அதில் ஆராய்ச்சி நடத்திடும் அயல் நாட்டு அறிஞர்களை நேரில் பார்த்து, 'ஐயா வாருங்கள்' என்று சொல்லி அவர்களோடு அளவளாவிட முடியவில்லையே என்று அவர்கள் வருந்துகின்றனர்!

"பிரான்சு, போலந்து, அங்கேரி, ஆஸ்திரியா நாட்டுப் பிரதிநிதிகளோடு பேசினேன்; பழகினேன்" என்று மக்கள் அவரவர் ஊர் சென்று சொல்லுவதானால், அதனால் எத்தனை நேர்த்தியான உணர்வு ஏற்படுமென்பதை ஒருகணம் கற்பனை செய்து பாருங்கள்!

எனவேதான் தமிழ்க் கவிஞர்கள் பாடுவதைக் கேட்டிடவும், தமிழ்ச் சொற்பொழிவுகளைக் கேட்டிடவும், இனிய நாட்டியக் கலை நிகழ்ச்சிகளைக் கண்டிடவும், தமிழிசையைக் கேட்டிடவும், மற்றொரு நிகழ்ச்சிக்கு (பூம்புகார்) ஏற்பாடு செய்தோம்; பல இலட்சக்கணக்கான மக்கள் கண்டும் கேட்டும் களித்தனர்; இதேபோல், தமிழ் மக்களைக் குறித்தும் அவர்களது மொழியார்வம் குறித்தும் நிறைவான நினைவுகளோடு பன்னாட்டறிஞரும் தம் நாடு திரும்புவர்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம் அமைப்பது குறித்து எஸ். எம். காத்ரே (பூனா) இங்கு தெரிவித்திருக்கிறார்கள்; அதன் அமைப்பு—விதிகளைப் படித்துப் பார்த்தேன்; 'பட்டங்கள் வழங்கிடுவது அதன் பணிகளில் ஒன்று' எனச் சொல்லப்பட்டிருந்தது.

அன்புகூர்ந்து ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்; பட்டம் வழங்கும் வேலைக்கு நீங்கள் போகாதீர்! அந்த உணர்வை எதிர்த்து நில்லுங்கள்! ஒருவர் பட்டத்தை 'வாங்கினார்' என்று சொல்லும் அளவுக்கு நிலைமை உள்ளது!

பிரான்சு நாட்டில் உள்ள பிரெஞ்சுக் கழகம்போல் இது விளங்கட்டும்; 'தமிழக அரசு தன்னாலியன்ற நிதி உதவியை உலகத்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

இனித் தமிழுக்கு ஆபத்து இல்லை!

அண்ணா தலைமைபற்றி செட்டிநாட்டரசர்

பூம்புகார்நகர், சன. 10—

"1937-ம் ஆண்டு இந்தித் திணிப்பில் தமிழுக்கு ஆபத்து வந்தபோது சட்டமன்றத்தில் வெளியே பெரியாரும், அறிஞர் அண்ணா அவர்களும் தந்த தைரியத்தினால்தான் எங்களால் எதிர்க்க முடிந்தது!

"அன்றைய நாட்களிலேயே நாம் எதிர்த்தோம்; தமிழ் காக்கும் அந்தப் பணி இன்றும் தொடர்கிறது!

"அண்ணாவின் தலைமை உள்ள மட்டும் தமிழுக்கு இனி ஆபத்தே இல்லை"

என்று இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் கடைசி நாளன்று பேசுகையில் இராஜாசர் முத்தையா (செட்டியார்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அயூப்கானிடம் ஷேக் அப்துல்லா தூது

இந்திராவைச் சந்திக்க வைக்க முயற்சி

புதுடில்லி, சன. 12—

ஷேக் அப்துல்லா, சமாதானத் தூதுவராகப் பாகிஸ்தானுக்குச் சென்றுவர அனுமதிக்கப்படுவாரேயானால், இந்திரா—அயூப் இருவரும் சந்தித்துப் பேசுவதற்கான வாய்ப்பை அவர் உருவாக்கக் கூடும் என்று நம்பகமாகத் தெரிகிறது.

தாஷ்கண்டு ஒப்பந்தத்திற்குப் பிறகு இந்தியா—பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் இருவரையும் சந்தித்துப் பேச வைக்கப் பல தடவைகள் முயற்சி செய்யப்பட்ட போதிலும், அது வெற்றி பெறவில்லை.

"காஷ்மீர் பிரச்சினை பற்றிப் பாகின்தான்—இந்தியா ஆகிய இருதரப்பினரிடையேயும் பேச்சு தொடங்குவதற்குமுன் அவர்களுக்கிடையே சுமுகமான சூழ்நிலை உருவாக வேண்டும்" என ஷேக் அப்துல்லா விரும்புகிறார்.

தொழிலாளர்களுக்கான இன்சூரன்சுத் திட்டம்

ஒரு புள்ளிவிவரம்

புதுடில்லி, சன. 12—

சென்ற ஆண்டு செப்டம்பர் 30-ம் நாளுடன் முடிந்த காலாண்டின் இறுதியில் 3,21,800-பேர்கள் தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்சுத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தனர்.

இத்திட்டத்தின்கீழ் வரும் குடும்பங்களின் எண்ணிக்கை 32,21,950 ஆகும். இதனால் பயன்பெறும் நபர்களின் எண்ணிக்கை 1.31 கோடியாகும்.

பரிசீலனைக் காலாண்டில் 6 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இத்திட்டத்தின்படி இயங்கும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனர்.

உடல் நலிவு, தாய்மை, அங்க கீனம் ஆகியவற்றை உத்தேசித்த பரிசீலனைக் காலாண்டில் ரூ. 2 கோடி ஊழியர்களுக்கு ரொக்க உதவி அளிக்கப்பட்டது.

1967-ம் ஆண்டின் துவக்கத் இந்த இன்சூரன்சுத் திட்டம் 16,000-த்திற்கும் அதிகமான தொழிற்சாலைகளில் அமல் செய்யப்பட்டது.

இந்தத் திட்டத்தின்படி 57 சிகிச்சை நிலையங்களும், 32 மருத்துவமனைகளும் இயங்கிவருகின்றன.

வாழ்விலொரு திருநாள்--வையம் வியக்கும் பெருவிழா

பூம்புகாரில் நடந்ததைப்போல் இனியொன்று நடக்குமோ!

உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு--அறிஞர் அண்ணு காணும் பெருமிதம்!

'பூம்புகார்' நகரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டு இறுதி நாளில், விழா நிறைவுக் சொற்பொழிவாற்றிய பேரறிஞர் அண்ணு அவர்கள், மாநாட்டில் பொலிவையும், மக்களிடையே கண்ட எழுச்சியையும் உணர்ச்சியையும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுப் பேசியதாவது :—

இந்தப் பூம்புகார் மாநாட்டில் எந்த வகையில்—எந்த முறையில் யார் பங்கு கொண்டிருந்தாலும், வாழ்நாளிலே வேண்டி எண்ணி எண்ணிப் பெருமிதம் அடையும் நாளாக இந்தப் பத்து நாட்களும் அமையும்!

இந்த மாநாட்டில் பெரும் புலவர்களைக் கண்டார்கள்! அவர்தம் கவியுள்ளங்களைக் கண்டார்கள்! தமிழையும் தமிழ்நாட்டையும் பற்றி அவர்கள் பாடிய பாடல்களையும், பேசிய பேச்சுக்களையும் கேட்டார்கள்!

அரைவல்லார் பொருள் கூறியதையும், அவர்களது பொருளுரையில் ஒலியுருக்குள்ள தொடர்பு பற்றியும் கேட்டிருப்பீர்கள்!

ஒரு நாள் தாய்மார்களுக்கென்றே, 'மகளிர் நாள்' என ஒதுக்கப்பட்டது; தாய்த் திருக்குலம் தமிழ் மொழிபற்றி ஆற்றிய உரைகளையும் கேட்டிருப்பீர்கள்!

இந்த மாநாட்டு மேடையில் சேரன் ஒரு கால் நின்றிருப்பான்! சோழன் இன்னொரு கால் உலவியிருப்பான்! பாண்டியன் மற்றொருகால் தோன்றியிருப்பான்!

இளங்கோவடிகள் வந்திருப்பார்! இலக்கண ஆய்வாளர்கள் வருகை புரிந்திருப்பார்கள்!

'பூம்புகார்' என்ற இந்தத் திருப்பெயரைக் கேட்டபோதே நம் நினைவு எங்கோ சென்றிருக்கும்! அன்று எத்துணைச் சிறப்பாக வாழ்ந்தோம்—இப்போது எத்துணை இடர்ப்பாடுகளில் சிக்கித் தவிக்கிறோம்!

அன்று வளமாக வாழ்ந்தோம்—இன்று வறுமைப் பள்ளத்தில் வீழ்ந்திருக்கிறோம்!

அன்று உலகத்தார் பாராட்டி வாழ்ந்தோம்! இன்று நம் மிடம் உள்ளதும் பறிக்கப் பிறர் வரும் நிலையும், 'அதற்காகப் பயப்படாதீர்கள்' என்று செட்டிநாட்டார் போன்றோர் நமக்குக் கூறும் நிலைமிலும் உள்ளோம்!

வானத்தில் பால்வீதி காய்கின்ற வேளை—அந்த நிலவொளி பட்டதால், கவிஞர் உணர்ச்சி உள்ளத்தில் பொங்கி எழுகிறது! யாப்புத் தெரியாவிடினும் இலக்கணம் புரியாவிடினும், பால நிலவொளி மேலேயில் பட்டு இன்பம் பெருக்கிய காரணத்தால்—அந்தப் பகலை நினைவு மாறு காரணத்தால்—கவிதை உணர்ந்து, நமது வாழ்வு விளக்கம் தமிழைப் பாடிய நினைக்கிறோம்!

அது முடிந்து இலத்தினுள்ளே செல்லும்போது, இல்லத்தில் இருக்கும் ஒரே ஒரு விளக்கும்—எண்ணெய் இல்லாத காரணத்தால் ஒளி குன்றி அணைந்திட—இல்லத்தில் இருள் சூழ்ந்தால் உள்ளம் என்ன பாடுபடும்?

வெளியிலே நிலவொளி—உள்ளே இருள்! வெளியே உணர்ச்சிப் பெருக்கு—உள்ளே மனம் உலர்ந்த நிலை! தந்த ஏற்பு—தவிப்பு!

பத்து நாட்களும் தமிழ் பெருமக்கள் தந்த விளக்கம் கேட்டு, வாள் நிலவு ஒளியில் தோன்றிய பெருமித உணர்ச்சியை அடைகிறோம்!

நிகழ் காலம் பற்றி நினைக்கும் போது, விளக்கேந்திய விடு போல் நம்முள்ளம் மாறுகிறது!

உன்னதத் தமிழைப் பெற்ற உங்கள் வாழ்த்துவதா—அத்தகைய தமிழ் இருக்கும் வாழ்வில் வளமையை முடியாத நிலை குறித்து வருந்துவதா எனத் தெரியவில்லை!

ஐம்பெருங் காப்பியங்களும் காவியங்களும் படைத்த தமிழ் மொழியின் அருமை பெருமை கிணத்து மகிழ்வதா—தமிழ் பொழியை விட வேறு மொழி சிறந்தது எனக் கூறும் சிலரும் இருப்பது கண்டு வருந்துவதா எனத் தெரியில்லை!

தமிழ்ச் சமுதாயம், தமிழ் மொழியின் அடிப்படையிலான இயல் குகிறது! இதை உணர்ந்திருந்தாலும், எடுத்துச் சொல்லமுடியாமல்—எடுத்துச் சொல்லும் வகையறியாது, நாம் இருக்கலாம்; ஆனால், 'தமிழ் வாழ்தலாலான தமிழர் வாழமுடியும்: தமிழர் வாழ்ந்தல்லான தமிழ்ச் சமுதாயம் வாழமுடியும்' என்று நாம் உள்ளூர உணர்ந்திருக்கிறோம்!

அதனால்தான், மொழிக்காக ஒரு மாநாடு என்றும், தமிழாசிரியர் மட்டும்—புலவர்கள் மட்டும்—கற்றறிந்த கவிஞர்கள் மட்டும் இந்த மாநாட்டுக்கு வரவில்லை; தமிழர் அனைவரும் வங்கங்கிலும் குரல் கொடுக்கிறோம்! அவர்களே ஒரு கவிதையாக விளங்குகிறார்கள்! அவர் கள் பேச்சிலே ஒரு பாட்டொலி! அவர்கள் மூச்சிலே தமிழ் எழுச்சி! அவர்கள் நடமாடும் போது வீரத் தமிழமோக மாடு வது போன்ற ஓர் உணர்வு இங்கே தோன்றுகிறது!

இங்கே ஆடவரும் வந்திருக்கிறார்கள்—ஆரணங்குகளும் வந்திருக்கிறார்கள்! இன்ஞர்களும் முதிய வர்களும் வந்திருக்கிறார்கள்; தாய்மார்கள், தாங்கள் பெற்றெடுத்த வெற்றியான குழந்தை களுடன் வந்திருக்கிறார்கள்! தமிழின்பத்தைத் தாங்கள் செவி மடுப்பதோடு—தங்கள் குழந்தை களுக்குக் கருத்து விளங்கிலு லும் விளங்காவிலும், 'தமிழ் ஒசை இன்பம் அந்தக் குழந்தை களின் செவிவழி புகுது இரத்ததோடு இரத்தமாய்—மூளை யோடு மூளையாய் மாறட்டும்' என்ற நினைப்பில் இங்பில் குழந்தைகளுடன் வந்திருக்கிறார்கள் தாய்மார்கள்!

அரும்பும் மலரும் முத்திடும் பூங்காவை, ஒவியமாகத் தீட்ட நினைக்கலாம் ஓர் ஓவியன்! அதைக் கவிதையாக்கிட்டத் துணியலாம் கவி பாடக் கற்ற வன்!

நான் ஓவியனல்லன்—அதைக் கற்றுத் தோற்றவன்; கவி பாடிட நினைப்பருளும் அதில் முயற்சி செய்யாமலே தான் தைக் குடத்திலிட்டவன்; எனிலும், உள்ளத்தில் பதித்தவை என்றும் மறவாமல் நினைவில் வைத்திருப்பவன்!

ஆகவே, இங்கு நான் கண்ட காட்சியை, கண்டகி திறந்த்க்கிற நேரத்திலே மட்டுமல்ல—கண்ணை மூடுகின்ற நேரத்திலும் மறக்கமுடியாது!

பூம்புகார் என்ற நகரையும்—இந்த நகரில் அங்களில் அமைந்த கட்டிடப் போல் 'பூம் கார்க் கோட்டையையும், ஒளிவிடும் ஒளிவிளக்குகளையும்—அந்த ஒளி விளக்கையும் மிஞ்சும் வகையில் உங்கள் கண்களிலிருந்து ஒளிக் கிளம்பி அந்த ஒளி, விரவி -- பரவி நிற்கும் காட்சியும் என் மனத்தவிட்டுநன்றுமிங்காது! இந்த உணர்ச்சி எனக்கு மட்ட மல்ல—உங்களுக்கும் இருக்கும்!

இந்த மாநாடு நடந்தபிறகும் பல மாநாடுகள் நடக்கலாம்; ஆனால், 'அந்தப் பூம்புகார் மாநாடுபோல் ஆகுமா' என்று நீங்கள் கேட்டத்தான் போகிறீர்கள்!

'உங்கள் ஊருக்கு ஒரு தமிழ்ப் புலவர் வருகிறார்' என்று கூறினால், 'பூம்புகார் மாநாட்டில் பார்க்காத புலவரா?' என நீங்கள் கேட்கத்தான் போகிறீர்கள்!

அந்த அளவிற்குப் பூம்புகாருக்கும்—உங்களுக்கு மிடையே நெருங்கிய உறவை -- நீக்கமுடியாத பாசத்தை -- தமிழ் எழுச்சியை—உணர்வை உண்டாக்கிக்கொண்டுவிட்டார்கள்!

இன்றிலிருந்து நான் செல்வதற்காக வாவது கவிதை எழுதத் தொடங்குங்கள்; தமிழ் உணர்வு உள்ளத்தில் உள்ள காரணத்தால், கட்டாயம் கவிதை வரும்!

அதை, 'கவிதை அல்ல' என்று கூறுவார்கள், புலவர்கள்; ஆனால் நான், 'கவிதை அல்ல' என்று கூறமாட்டேன்!

இலக்கணத்தை அடிப்படையாக வைத்து, அதை, 'கவிதை அல்ல' என்று புலவர்கள் கூறலாம்; நான், உணர்ச்சியை வைத்து, அதை 'கவிதை' என் கிறேன்!

இன்னும் சொன்னால், உங்கள் பார்வையே கவிதை! உங்கள் பேச்சே ஒரு கவிதை! உங்கள் கையெழுத்தே ஒரு கவிதை! உங்கள் வாழ்நாளெல்லாமே ஒரு கவிதை! இங்கே எங்கும் கிழைக்கிறதும் நாதமே ஒரு கவிதை! இதைப்பற்றி எங்கக் கவிஞன் முழுதும் பாடமுடியும்?

அன்றலர்ந்த மலரைத்தான் கவிஞன் பாடமுடியும்; 10 நாட்களும் மலர்ந்திருக்கும் (மக்க ளின் முகம்) மலர்களைப் பற்றி எந்தக் கவிஞன் பாடிட முடியும்?

ஒரு வெண்ணிலவைத் தான் கவிஞன் பாடிட முடியும்; கறை ஏதுமில்லாத இந்த இலட்சக் கணக்கான வெண்ணிலவுகளை எந்தக் கவிஞன் பாடிட முடியும்?

நீங்களே கவிதையாகிவிட்டபிறகு யார் உங்களைக் கவிதையில் வடிக்க முடியும்?

புரட்சி கடிகர் எம்.ஜி.ஆர். பேசும் போது, 'அழகும், உள்ள உணர்ச்சியும் எனது கவிதை' என்பார்; அப்போது நீங்கள் கைதட்டினீர்கள்; 'கைதட்டுக்குப் பொருள் என்ன' என்று கிந்தித்துப் பார்த்தேன்; 'அழகும் உள்ள உணர்ச்சியும் உள்ள வர் எம்.ஜி.ஆர்.; எனவே, அவரே ஒரு கவிதை எனபதால் நீங்கள் கைதட்டினீர்கள்' என் பதைக் கண்டேன்!

கவிதையின் அளவுகோல்—என் னம் பொறுத்த வரையில்—உணர்ச்சிதான்; அத்தக் கவி தையில் சந்தம் இல்லாத இருக் லாம்; இலக்கணம் இல்லாது இருக்லாம்; இப்படிக் கூறுவதால், 'கவிதைக்கு இலக்கணம் கூடாது' என நான் கூறவில்லை!

ஆனால், இலக்கணத்திற்கும் மேலாக — ஊடாக இணைந்து தோடும உணர்ச்சியும், அழகும் தூய்மையும் நல்ல நிறைவையும் கொண்டு செய்யப்படும் செய லும், அந்தச் செயலுக்குக் காரணமான சிந்தனையும் ஒரு கவிதைதே!

முன்பு மாலிலம் ஆண்ட தமிழர், 'மீண்டும் அரசாளும் நாள் வருமா' எனக் கேட்ட பாரதி தாசன், 'தமிழர் அரசு வரும்' என்று தித்திப்பான சேதியைக் கூறினர்.

'தமிழர்கள் தங்கள் அரசைப் பெற்றிருக்கிறார்களா' என்பது, விரிவாக விவாதிக்கப்பட வேண்டிய ஒன்றும்."

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தமிழாராய்ச்சி நிலையத்துக்கு வழங்கும்' என உறுதி கூறுகிறேன்.

பட்டம் வழங்கும் யோசனையைக் கைவிட்டு, பிரெஞ்சுக் கழகம் போல் இடைவிடாத—ஆக்கபூர்வமான—பயனுள்ள ஆராய்ச்சிக்கு உங்களை அர்ப்பணித்துக்கொள்ளுங்கள்!

"தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களெல்லாம், தமிழ் மொழிக்கு உரியவை அல்ல; அவை, வேற்று மொழி யிலிருந்து எடுக்கப்பட்டவை" என்றே அல்லது "திருக்குறளே தமிழ் மொழியில் தோன்றியதல்ல; 'சுக்ர நீதி'யின் தமிழாக்கமே திருக்குறள்" என்றே கூறக்கூடிய ஒருவர் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையத்துக் தலைவராக வந்துவிடுகிறு ரென்று வைத்துக்கொள்வோம்; அத்தகைய ஒரு நிலையில் அந்தக் கருத்துக்களை மறுத்துரைத்து எழுதுகின்ற ஒருவரால், அந்த நிலையத்திலிருக்கு பட்டம் பெற இயலுமா?

திருக்குறளைப் பற்றி நான் குறிப்பிட்ட அந்தக் கூற்று, சிலரால் நீண்ட காட்டைகள் பேசப்பட்டவரும் ஒன்றும்; ஆம்; அது வெறும் பேச்சாகும்!

நல்லெண்ணத்தோடு சொல்கிறேன்—பட்டம் வழங்குகிற உங்கள் கருத்தைக் கைவிடுங்கள்!"

பூம்புகாரில்....

ஆரும் நாள்

பூம்புகார்கர், சன. 8—

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு நிகழ்ச்சிகள் பூம்புகார் நகரில் இன்று காலை 9-ம னிக்கு காமரிர்பேட்டை சிருட்டின் குடிலினில் காயன சிசையுடன் துவங்கியது.

இசைக்குப்பின், 'தமிழ்க் கனவு' என்ற தலைப்பில் கவியரங்கம்—கவிஞர் சுரதா தலைமையில் நடந்தது; பல்வேறு தலைப்புகளில் கவிஞர் ஆர். தமிழழகன், வே. இலட்சமணன், செல்வபாரதி, தமிழன்பன், புங்குன்றன், பொன்னடியான், சுப்பு ஆறுமுகம், ஆத்மாநன், மாயாண்டி, புத்தனேரி சுப்பிரமணியம், காவுக்கரசன், தளிகை உகைாதன், சிங்கப்பூர் சை சேர்க்த கவிஞர்கள் முசு, டெடு மாறன், உலகநாதன் ஆகியோர் தங்களின் கவிதைகளைச் சிறப்புற வினக்கிப் பாடினர்.

பிறகு புலவர் நிராமையா, திருக்குறள் எண்ணிக்க கறினலும்—பொருளைக் கூறினலும்—ஒரு வார்த்தையைக் கூறினலும்—அதற்குரிய திருக்குறளை உடனே சொல்லுவது, திருக்குறளைத் தலை கீழாய்ச் சொல்லுவது, கவிதை எழுதுவது போன்ற அவதானங்களைச் செய்து காட்டினார்.

அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் புலவர் நிராமையாவுக்கு மாலையணிவித்துப் பாராட்டினர்.

அவதானம் முடிந்தபின் வேதகிரி பின் நூதன கட நிகழ்ச்சியும், மகாலிங்க குருக்களின் சங்கு இசையும் நடந்தன.

பாரதியாரின் பெத்தி லலிதா பாரதி, பாரதியாரின் பாடல்களைச் சிறப்புப் படிக் காட்டினார்.

பின் அண்ணுவினின் காயன இசை நிகழ்ச்சி நடந்தது.

பின், 'வளரும் தமிழ்' என்ற பொதுத் தலைப்பில், 'அரசியலே தமிழை வளர்க்கிறது'—'கலையே தமிழை வளர்க்கிறது'—'பத்திரிகைகளே தமிழை வளர்க்கின்றன' என்ற தலைப்புகளில், அமைச்சர் கே. ஏ. மதியழகன் தலைமையில், பன்னிரண்டுபேர் கலக்துகொண்டு கருத்துரை வழங்கிய பட்டிமன்ற நிகழ்ச்சி நடைபெற்றது.

பின், 'தமிழின் பொற்காலம்' என்ற தலைப்பில் காயிதே மில்லத் இசுமாயில் சாகிப் தலைமையில் சொற்பொழிவுத் தொடர் நடை பெற்றது; இந்கிழச்சி சிலப, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அரியதோர் வரலாற்றுச் சிறப்புக்களின் வெடிக்கங்கள் அடங்கிய சொற்பொழிவுடன் துவக்கிவைத்தார்.

ஏழாம் நாள்

உலகத் தமிழ் மாநாட்டின் 7-ம் நாள் நிகழ்ச்சி பூம்புகார் நகரில் 10—1—68 காலை 9-மணிக்கு மதுரை சேதுராமன் குழுவினரின் நாயன இசையுடன் துவங்கியது.

பின், திரு. அய்யாவுவின் 'புல் புகாரா' இசையும், எஸ். டி. கபபு லட்சுமி குழுவினரின் திருவள்ளுவர் வாழ்த்துப்பாடலும் நடைபெற்றன.

பின், குடந்தை டி. என். சீனிவாசன், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடல்களைப் பாடினர்.

பின், 'காலமும் கருத்தும்' என்ற தலைப்பில் ஒளவை துரைசாமி அவர்கள் தலைமையில் சொற் பொழிவு நிகழ்ச்சி துவங்கியது; இச்சொற்பொழிவுத் தொடரில் திருவாளர்கள் சி. பி. சிற்றரசு எம்.எல்.ஏ., ஏ. வி. பி. ஆசைத் தம்பி எம்.எல்.ஏ., ஆலெ அருணு எம்.எல் ஏ., நாவலன், பேராசிரியர் அன்புகனபதி, டிடிகமனி டி. வி. நாராயணசாமி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

மாலையில் குடந்தை சீனிவாசனின் இனிய இசை முழக்கத்துடன் துவங்கிய மாநாட்டு நிகழ்ச்சியில், 'காலமும் கருத்தும்' எனும் தலைப்பிலேயே புலவர் கு. திருமேனி, பாண்டியன், பெரியசாமித் தூரன், க. அறிவுநகன் எம்.ஏ., எம்.எல்.சி., பெ. சீனிவாசன் எம். எல்.ஏ., ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார் ஆகியோர் கருத்து விளக்கமளித்தனர்.

அடுத்து, மாநாட்டின் சிறப்புக்கான எல்லா வழியிலும் பேருதவியளித்து ஒத்துழைத்துச் சிறப்பித்த அனைவருக்கும் அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் கன்றி தெரிவித்து, ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் பாராட்டுப் பரிசுகள் வழங்கினர்.

அடுத்து, மொழி நூலறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கட்கு—அவர்தம் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி,அமைச்சர் கருணிதி அவர்கள் பொன்முடை போர்த்திச் சிறப்பித்தார்.

அடுத்து, 'புகாரில் ஒரு நாள்' என்ற தலைப்பில் கவிதைகள் எழுதிப் பரிசு பெற்றவர்களுக்கு புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சக்திரன், பேரறிஞர் அண்ணு பரிசு உட்பட பத்துப் பரிசுகளை வழங்கிச் சிறப் புரையாற்றினர்.

பின்னர், தலையாயநீனத்தின் சசார்பில் திரு. சோமசுக்தரத் தம்பிரான் அவர்கள், அதிகர் அண்ணு அமைச்சர்கள் நிரா. நெடுஞ் செழியன், மு. கருணுநிதி ஆகியோருக்குப் பொன் முடைகள் போர்த்தி, மாநாட்டுக்கு வாழ்த் துரை வழங்கினர்.

அடுத்து செட்டிநாட்டரசர் எம். ஏ. முத்தையா செட்டியார், மாநாட்டை வாழ்த்திப் பேசினர்.

இறுதியாக பேரறிஞர் அண்ணு அவர்கள், வெள்ளமெனக் குழுமியிருந்த தமிழ் மக்களுக்கு விளக்கமும் எழுச்சியும் மிக்க விழா மொழ வுச் சொற்பொழிவாற்றினர்கள்.

இக்கிழச்சிக்குப் பின், கவியரங்கில், டி.கே.எஸ். சகோதரர்களின் 'நிராசரசர சேரமுன்' நாடகம் நடைபெற்றது.

வெளிநாட்டினருக்கு அண்ணா விருந்தோம்பல்

பரிசுப் பொருள்கள் வழங்கி வழியனுப்பு விழா

சென்னை, சன. 12—

உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் நேற்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் விருந்தளித்துச் சிறப்பித்தார்கள்.

இந்த விருந்து, நேற்றிரவு 8-மணிக்கு அரசினர் தோட்டத்தில் நடைபெற்றது.

விருந்துக்குப் பின், மாநாட்டுக்கு உழைத்தவர்களைப் பாராட்டி அறிஞர் அண்ணா அவர்கள் பொற் பதக்கங்கள் அளித்தார்.

பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், பரிசளிப்பின் நோக்கம் பற்றி விளக்கினார்.

முதலமைச்சரின் தனிச் செயலாளர் டி. சொக்கலிங்கம், சீரணித் தனி அதிகாரி க. பரமசாமி, மாநாட்டுப் பொறுப்பாளர் சு. பாலன், மேடைப் பொறுப்பாளர் சா. கணேசன் எம்.சி. ஆகியோருக்கு அண்ணா அவர்கள் பதக்கம் அளித்தார்.

சோவியத் நாட்டின் சார்பில் பாரதியார் நூல் ஒன்று அண்ணா அவர்களுக்கு அளிக்கப்பட்டன.

தேங்காய் மூடியினாலான மலர் வைப்புச் சிமிழும், குங்குமச் சிமிழும் வெளிநாட்டுப் பிரதிநிதிகட்கு வழங்கப்பட்டது.

ருமேனியாவைச் சேர்ந்த டிமிட்ரோவுக்கு இப்பொருட்களை உள்ளாட்சித் துறை அமைச்சர் முத்துச்சாமி வழங்கினார்.

பீஜித் தீவைச் சேர்ந்த திருமதி சந்திரா முருகேசனுக்கு இப்பொருட்களை உணவமைச்சர் திரு. மதியழகன் வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் தமிழின் எழுச்சி துவங்கத்தொடங்கிவிட்டது; அண்ணாவின் பொற்காலத்தின் அருணோதயமாக இந்நாள் விளங்குகிறது."

திருமதி சந்திரா முருகேசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"எனது கணவர் பீஜித் தீவுக்குத் தூதுவராகச்சென்றதால் நானும் அங்கு சென்றேன்; அங்குள்ள தமிழ் மக்கள், தமிழ் அறியாத நிலையில் இருக்கக் கண்டேன்; அவர்களுக்கெல்லாம் தமிழ் கற்பிக்க அறிஞர் அண்ணா அவர்கள் உதவவேண்டும்"

உலகத் தமிழ்க் கருத்தரங்கின் பொருளாளர் திரு. வி.எஸ். தியாகராசனார், மாநாட்டு வெற்றிக்கு ஒத்துழைத்த அண்ணா அவர்கட்கும், ஏனைய அமைச்சர்கட்கும், மற்றவர்கட்கும் நன்றி தெரிவித்துப் பேசினார்.

நிலக்கோட்டைத் தொகுதியில் அமைச்சர் செ.மாதவன்

சுற்றுப்பயணம்

14—1—68 காலை 10-30 மணி விருவீடு—ஊராட்சி மன்ற வரவேற்பு; துணை அஞ்சல் நிலையத் துவக்கவிழா; 11 மணி: செக்காபட்டி; 11-30 மணி: பழைய வத்தலக்குண்டு—ஊராட்சி ஒன்றிய மூத்தோர் ஆதாரப் பள்ளியில் கலைவாணர் படத் திறப்பு விழா; 12 மணி: கோ. காமாட்சிபுரம்: பிற்பகல் 12-30 மணி: புதுப்பட்டி; 1 மணி: ஜி. தும்மலப்பட்டி: 2-30 மணி: வெங்கிடாதிரிக்கோட்டை; 3 மணி: பூசாரிபட்டி: மாலை 4 மணி: கொடை ரோடு; 5 மணி: பள்ளபட்டி; 6 மணி: நிலக்கோட்டை; இரவு 8 மணி: வத்தலக்குண்டு.

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்களும், நீ. அன்புச்செழியன் பி.ஏ., எம்.பி., பி. எஸ். மணியன் பி.ஏ.பி எல்., எம்.எல்.ஏ., ஆ. முனியாண்டி எம்.எல்.ஏ. ஆகியோரும் கலந்துகொள்வர்.

62-வது பார்க்பேர் பொருட்காட்சி

எஸ். ஐ. ஏ. ஏ. மைதானம் — சென்னை-3

13—1—68 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு

ரேக்ளா பந்தயம் நடைபெறும்

ரேக்ளாவில் வெற்றி பெற்றவர்களுக்கு விவசாயத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி பரிசுகள் வழங்குவார்.

மாலை 6-30 மணிக்கு:

தியேட்டர் கிரேசிஸ் அளிக்கும்

தாம்பரம் லலிதா, பட்டு நடிக்கும்

'நாடகத்தில் நடந்தது' (நகைச்சுவை நாடகம்)

கட்டணம்: ரூ. 2, 1. காசு 50

தி.மு.க.-வின் 18 ஆண்டுச் சாதனையைக் காணத் தவறாதீர்

15—1—68 திங்கள் மாலை 6-30 மணிக்கு—நாட்டியப் பேரொளி பத்மினியின் 'தசாவதாரம்' நாட்டிய நாடகம் நடைபெறும்.

(அட்வான்ஸ் புக்கிங் உண்டு)

ஒட்டியம்பாக்கத்தில் புதிய பாலம்

முதலமைச்சர் அண்ணா அடிக்கல் நாட்டுவார்

கருணாநிதி---முத்துசாமி---எம். ஜி. ஆர். கலந்துகொள்கின்றனர்

ஒட்டியம்பாக்கத்தில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் பாலங்களின் கால்கோள் விழா, 14—1—68 மாலை 4-30 மணிக்கு புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தலைமையில் நடைபெறும்; அறிஞர் அண்ணா அவர்கள் இணைப்புப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டுவார்.

அமைச்சர்கள் மு. கருணாநிதி, மா. முத்துசாமி, மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கே. இலக்குமிகாந்தன் பாரதி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவர்.

அமைச்சர்கள் பங்கேற்கும் சிட்லப்பாக்கம் ஊராட்சி விழா

எம்.ஜி.ஆர்.கலந்துகொள்கிறார்

சிட்லப்பாக்கம் ஊராட்சிமன்றச் சார்பில் 14—1—68 மாலை 6-மணிக்கு செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கே. இலக்குமிகாந்தன் பாரதி தலைமையில் அமைச்சர் மா. முத்துசாமி ஊராட்சிமன்றப் புதிய அலுவலகக் கட்டிடத்தைத் திறந்துவைப்பார்; புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். மின்விளக்குகளை இயக்கிவைப்பார்; அமைச்சர் மு. கருணாநிதி, அறிஞர் அண்ணா படத்தைத் திறந்து வைப்பார்.

சென்னை 92-வது வட்டத்தில் மாநகராட்சி நாளங்காடி

அண்ணா அடிக்கல்நாட்டு விழா

சென்னை 92-வது வட்டம் கோடம்பாக்கம் ஆற்காட்டுச் சாலையில், மாநகராட்சியின் நாளங்காடிக்கான அடிக்கல்நாட்டு விழா, 13—1—68 மாலை 6 மணிக்கு மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமையிலும் — திரு. நீலநாராயணன் முன்னிலையிலும் நடைபெறும்; அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கல் நாட்டுவார்கள்; வரவேற்பு: சா. கணேசன் எம்.சி.

தமிழ் மூதுரைக்கு உருவகம் ஏற்பட்டது

உலகத் தமிழ் மாநாட்டு வெற்றி குறித்து அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்

வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வழியனுப்பும் விழாவில் உரை

சென்னை, சன. 11—

"உலகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வருகைதந்த தமிழ் அறிஞர்கள், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் தாக்கல் செய்த அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்மூலம், தமிழ் சிறப்புற்றது — தமிழகம் சிறப்புற்றது; தமிழகம் பெருமை கொண்டது; ஏற்றமும் எழிலும் அடைந்தது; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மூதுரைக்கு உருவகம் ஏற்பட்டது."

இவ்வாறு, உலகத் தமிழ் மாநாட்டை வெற்றிபெறச் செய்த அறிஞர்களுக்குத் தமிழக அரசு சார்பில், அமைச்சர் இரா நெடுஞ்செழியன் நன்றி தெரிவித்துப் பேசுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

உலகத் தமிழ் மாநாடு—கருத்தரங்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு பிரியா விடை அளிக்கப் பாலர் அரங்கில் ஓர் கூட்டம் நடைபெற்றது; மகிழ்ச்சி நிலவிய சூழ்நிலையில், பிரதிநிதிகள் விடைபெற்றுக் கொண்டனர்.

பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளும், மாநாட்டு நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

இவ்விழாவுக்கு, திரு. சுனிதிகுமார் சாட்டர்ஜி தலைமைதாங்கினார்.

மாநாட்டைச் சிறப்பாக நடத்தியதுடன், பிரதிநிதிகளின் வசதிகளையும் நன்கு கவனித்துக்கொண்டதற்காக, மாநாட்டு நிர்வாகிகளின் திறமை பலராலும் பாராட்டப்பட்டது.

விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த மாநாடு சிறப்புற நடந்தது குறித்துப் பல்வேறு அறிஞர்கள் பாராட்டுரை வழங்கினர் என்றாலும், இந்த மாநாட்டில் சில தொல்லைகளும் வாய்ப்புக் குறைவும் சிலருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும்; அவற்றையெல்லாம், தமிழ் மரபுக்கு ஏற்றபடி மறந்து — பாராட்டுரைகளை வழங்கியிருப்பது பாராட்டுதற்கு உரியதாகும்.

தமிழின் சிறப்புக் குறித்து வெளிநாட்டு அறிஞர்கள் பாராட்டுக்களை வழங்கியபோது பூரிப்பும் மகிழ்ச்சியும் அடைந்தோம்;

'ஈன்ற பொழுதின்
பெரிது உவக்கும்—
தன் மகனைச்சான்றோன்
எனக் கேட்ட தாய்'

எனத் திருவள்ளுவர் கூறியது போல், தமிழின் சிறப்பு—புகழ்—தொன்மை முதலியவைகளைப் பற்றிப் பிற நாட்டு அறிஞர்கள் புகழ்வது கேட்டு நாங்கள் பெருமிதம் அடைந்தோம்.

இந்தக் கருத்தரங்கின் மூலம் பல்வேறு நாடுகளின் அறிஞர்கள் வெட்டித் தந்துள்ள தங்கத்தை (ஆராய்ச்சிக் கட்டுரைகளை) ஊர்கள்தோறும் நகரங்கள்தோறும் முதலமைச்சரும், நானும் மற்றவர்களும் மக்களுக்கு அளிக்கும் வாய்ப்பினைக் கொடுத்திருக்கிறார்கள்; அதற்காகத் தமிழக அரசின் சார்பிலும், மக்களின் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்."

பொங்கல் திருநாளில் ஏர்முனை விழா

தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, சன. 11—

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு இந்த ஆண்டு பொங்கல் விழாவைத் தமிழகம் முழுவதிலும் 'ஏர்முனை' விழாவாகக் கொண்டாடுமாறு தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

இந்த விழாவில் மிகுபயன் தரும் விதை நெல் ரகங்களை—குறிப்பாக 'ஏ.டி.டி. 27' வித்துக்களைப் புகழ்படுத்துவது முக்கியப் பணியாக விளங்கும்.

கிடைக்கக்கூடிய எல்லா நிலங்களையும் சாகுபடிக்குப் பயன்படுத்தல்—ஒவ்வொரு விளை நிலத்திலும் மேற்கொண்டு கூடுதலாக ஒருபோகம் பயிர் செய்ய வகை செய்தல்—திருந்திய சாகுபடி மூலம் விளைச்சலை அதிகப்படுத்தல்—மக்கிய உரம், தழை உரம் முதலிய உள்ளூர் எரு வசதிகளைப் பெருக்குதல்—உருளைக் கிழங்கு, மரவள்ளி, காய்கறிகள் போன்ற துணை உணவுப் பொருள்களைச் சாகுபடி செய்தல்—பால், இறைச்சி, முட்டை, மீன் போன்ற ஊட்ட உணவுகளைப் பெருக்குதல்—முதலியன இந்த ஏர்முனை விழாவில் முக்கிய அம்சங்களாக இருக்கும்.

மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், நகராட்சிகள்—ஊராட்சி ஒன்றியங்கள்—ஊராட்சிகள் ஆகியவற்றிலும் இவ்விழா சனவரி 15-ம் நாள் கொண்டாடப்படும்,

விழாவினையொட்டி ஊர்வலங்கள் – பொதுக்கூட்டங்கள் – விவசாயப் பொருட்காட்சிகள் –திரைப்படக்காட்சிகள்–நாடகங்கள்–கிராமிய நடனங்கள்–வில்லுப்பாட்டு முதலிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

சென்னை நகரில் செய்தித் துறை இயக்குநரும், மாவட்டங்களில் மாவட்டக் கலெக்டர்களும் இந்த விழாவுக்குப் பொறுப்பாக இருப்பார்கள்.

சி. பி. சிற்றரசு

எம்.எல்.சி. சுற்றுப்பயணம்

சன. 14: செங்கற்பட்டு; 15: சென்னை 96-வது வட்டம்; 16: விருத்தாசலம்: 17: கடலூர்; 18: வாழவந்தான் கோட்டை; 19: திருப்பரங்குன்றம்; 20: அலங்காநல்லூர்; 21: தச்சநல்லூர்; 22: கோயில்பட்டி; 23, 24: நாகர்கோயில்; 25: களக்காடு; 26: கழுகுமலை.

குடும்பக் கட்டுப்பாடு

மக்களுக்கு உணர்த்தத் தீவிர முயற்சி

புதுடில்லி, சன. 12—

குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்துவதற்காகவும், கருத்தடை முறைகளை அவர்களுக்கு விளக்குவதற்காகவும் குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் பிரசாரம் தீவிரமாக்கப்படுகிறது; இதற்காக ரூ. 10 கோடி ஒதுக்கப்படுகிறது; இதில் ரூ. 6 36 கோடி மாநில அரசுகளுக்கு அளிக்கப்படும்.

திரைப் படங்கள், பாட்டுகள், நாடகங்கள், பொம்மலாட்ட நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், கதாகாலட்சேபங்கள் முதலியவற்றின் மூலம் கிராமப் பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் செய்யப்படுகிறது.

ஆஸ்திரேலியாவுக்குப் புதிய தலைமை அமைச்சர்

கான்பெரா, சன. 12—

செனட்டர் ஜான் கிரே கார்டன் ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சராகப் பதவியேற்றார்.

டிசம்பர் 17-ம் நாள் நீந்துவதற்காகச் சென்ற முன்னாள் ஆஸ்திரேலியத் தலைமையமைச்சர் ஓல்ட், கடலிலேயே மூழ்கி மரணமடைந்ததையடுத்து நடைபெற்ற தேர்தலில் செனட்டர் கார்டன் தலைமையமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாலர் அரங்கம்

ஜனவரி 12, 13, 14 தேதிகளில் மாலை 4 மணிக்கு

'டார்ஜானும் நியூயார்க் வீரச்செயல்களும்'

(எம்.ஜி.எம். படம்)

கட்டணம் :

சிறுவர்களுக்கு : 20 காசு

பெரியவர்களுக்கு : 40 காசு

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.